ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1870/71 - 2014 ජූලි මස 11 වැනි සිකුරාදා - 2014.07.11
*1870/71 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 3/2012*

**1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம்**

*1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 12 (1) (V) என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 20 ஆம் பிரிவின் கீழ் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ரிசாத் பதியுதீன்,
கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர்.

கொழும்பு,
*2014, யூலை 10.*

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2014 ஆம் ஆண்டின் சேதனப் பொருள் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி அபிவிருத்தி ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், 2014, யூலை மாதம் 10 ஆந் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. சேதனப் பொருள் கமத்தொழில்சார் உற்பத்திப் பொருட்களைப் பயிரிடுதல், விளைவாக்குதல், பதனிடுதல், உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், ஏற்றுமதி செய்தல் மற்றும் இறக்குமதி செய்தல் என்ற நோக்கங்களுக்காகச் சபையானது இலங்கையின் சேதனப் பொருட் கட்டுப்பாட்டுச் குழுவாகக் கருதப்படுதல் வேண்டும்.

**இலங்கைச் சேதனப்பொருள் நியமங்கள்**

3. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தினால் இலங்கைச் சேதனப்பொருள் நியமங்கள் வகுத்தமைக்கப்படுவதனை சபையானது செய்வித்தல் வேண்டும்.

4. மூன்றாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட நியமங்களை வகுத்தமைப்பதில், இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் பின்வருவனவற்றுக்குக் கவனஞ் செலுத்தியுள்ளதென்பதைச் சபையானது உறுதிப்படுத்துதல் வேண்டும் :-

(அ) சேதனப் பொருள் கமத்தொழில்சார் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்தல், விளைவாக்குதல், பதனிடுதல் மற்றும் அவற்றுக்குச் சுட்டுத்துண்டிடுதல் தொடர்பான தேவைப்பாடுகள், அத்துடன்

(ஆ) சேதனப்பொருள் கமத்தொழில்சார் இயக்கத்தின் சர்வதேச சம்மேளனம், கோடெக்ஸ் அலிமென்ட்டேரியஸ் மற்றும் சேதனப் பொருள் கமத்தொழில் அல்லது கமத்தொழில்சார் உற்பத்திப் பொருட்களுடன் ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒத்த சர்வதேசக் குழு என்பவற்றினால் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகள் மற்றும் தோதானவிடத்து, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுட்பட, சேதனப்பொருள் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி, ஏற்றுமதி அல்லது விற்பனை சம்பந்தமாக இறக்குமதி செய்கின்ற அல்லது ஏற்றுமதி செய்கின்ற நாடுகளினால் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதி.

5. சபையானது, 3 ஆம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட நியமங்களை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கைச் சேதனப்பொருள் நியமங்கள், 26 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் நியமிக்கப்பட்ட மதியுரைக் குழுவின் மதியுரையைக் கவனத்திற்கொண்டு, சபையின் விதப்புரையின் மீது, அது ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் எந்நேரத்திலும் திருத்தப்படலாம் அல்லது வேறுபடுத்தப்படலாம்.

6. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கைச் சேதனப்பொருள் நியமங்களையும் மற்றும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளையும் கடைப்பிடித்தலும் அவற்றுக்கு இணங்கியொழுகுதலும், சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப் பொருட்களின் தயாரிப்பாளர், பதனிடுபவர், உற்பத்தியாளர் மற்றும் ஏற்றுமதியாளர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

**சேதனக் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருட்களின் சான்றுப்படுத்துகைக் குழுக்களையும், ஆய்வு கூடங்களையும் மற்றும் ஏற்றுமதியாளர்களையும் இறக்குமதியாளர்களையும் பதிவு செய்தல்**

7. ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையினால் தராதர அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள ஒரு சான்றுப்படுத்துகை அல்லது சோதனைக்குழு அல்லது ஓர் ஆய்வுகூடம், இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காகப் பதிவு செய்யப்படுவதற்குச் சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

8. ஏழாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நிறுவனத்தின் அல்லது ஆய்வுகூடத்தின் நிர்வாக அலுவலர் அல்லது பிரதான நிறைவேற்றலுவலர், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் சபைக்கு விண்ணப்பிக்கலாம். சான்றுப்படுத்துகைக் குழுவுக்கான அல்லது ஆய்வு கூடத்துக்கான பதிவுக் கட்டணம் சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும்.

9. பதிவுக்காகச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றைச் செய்முறைப்படுத்துவதில், சபையானது, 26 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் நியமிக்கப்பட்ட சான்றுப்படுத்துகை பற்றிய மதியுரைக் குழுவின் மதியுரையைப் பெறலாம்.

10. பதிவு செய்யப்பட்டதன் மேல், சபையானது, விடயத்துக்கேற்ப சம்பந்தப்பட்ட சான்றுப்படுத்துகை அல்லது சோதனைக் குழுவுக்கு அல்லது ஆய்வுகூடத்துக்கு (இதனத்துப்பின்னர் "பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூடம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பதிவு செய்யப்பட்ட ஒரு சான்றுப்படுத்துகை அல்லது சோதனைக் குழுவாக அல்லது பதிவு செய்யப்பட்ட ஓர் ஆய்வுகூடமாக அதனை ஏற்றங்கீகரித்து, சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.

11. சேதனப்பொருள் கமத்தொழிசார் உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதியாளர் அல்லது இறக்குமதியாளர் ஒவ்வொருவரும், சபையினால் அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீது, சபையுடன் தன்னைப் பதிவு செய்துகொள்ளுமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

12. பதினோராம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர் அல்லது இறக்குமதியாளர் ஒருவர், அத்தகைய பதிவுக்கும் மற்றும் ஓராண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியாகவிருக்கவேண்டிய அனுமதிப்பத்திரமொன்றுக்குமான சபையினால் தீர்மானிக்கப்பட்டவாறான கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

13. பன்னிரெண்டாம் ஒழுங்குவிதியின் கீழ் ஏற்றுமதியாளர் அல்லது இறக்குமதியாளர் ஒருவருக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம், அவர் :-

(அ) ஓர் ஏற்றுமதியாளராகவிருக்குமிடத்து, இவ்வொழுங்குவிதிகளின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைவாக, அத்தகைய ஏற்றுமதியாளரினால் ஏற்றுமதி செய்யப்படுகின்ற சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருட்களின் மீது இவ்வொழுங்குவிதிகளிற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறான தேசிய சேதனப்பொருள் குறியை பயன்படுத்துவதற்கு அவரை உரித்துடையவராக்குதல் வேண்டும் ; அல்லது

(ஆ) ஓர் இறக்குமதியாளராகவிருக்குமிடத்து, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழொன்றுடன் "சேதனப்பொருள்" என்ற இலச்சினையை அல்லது சுட்டுத்துண்டைக் கொண்டுள்ள கமத்தொழிற்சார் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அவரை உரித்துடையவராக்குதல் வேண்டும் .

14. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை வலுவுறுத்தும் நோக்கங்களுக்காக, சபையுடன் பதிவு செய்யப்பட்ட எல்லா ஏற்றுமதியாளர்களும், இறக்குமதியாளர்களும் மற்றும் 13 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களும் பற்றிய நிரலொன்று காலத்துக்குக்காலம் சபையினால் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

15. ஏற்றுமதியாளராகவுள்ள ஆளெவரும், முதலில் பதிவு செய்யப்படாமலும், 12 ஆம் ஒழுங்குவிதியின் கீழான அனுமதிப்பத்திரமொன்றைப் பெறாமலும், சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருளாக ஏதேனும் கமத்தொழிற்சார் உற்பத்திப் பொருளை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்தலாகாது அல்லது அத்தகைய உற்பத்திப்பொருளின் மீது தேசிய சேதனப்பொருள் குறியை பயன்படுத்துதலாகாது அல்லது ஓர் இறக்குமதியாளராகவிருந்து, "சேதனப்பொருள்" என்ற இலச்சினையை அல்லது சுட்டுத்துண்டைக் கொண்ட ஏதேனும் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருளை இலங்கைக்குள் இறக்குமதி செய்தலாகாது.

16. பன்னிரெண்டாம் ஒழுங்குவிதியின் கீழ், முதலில் பதிவு செய்யப்படாமல் -

(அ) ஏற்றுமதியாளரொருவர் ஏதேனும் சேதனப் பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருளை ஏற்றுமதி செய்யுமிடத்து அல்லது ஏற்றுமதி செய்வதற்கு எத்தனிக்குமிடத்து ; அல்லது

(ஆ) இறக்குமதியாளரொருவர் "சேதனப்பொருள்" என்ற இலச்சினையை அல்லது சுட்டுத்துண்டைக் கொண்ட ஏதேனும் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருளை இறக்குமதி செய்யுமிடத்து அல்லது இறக்குமதி செய்வதற்கு எத்தனிக்குமிடத்து. விடயத்துக்கேற்ப, அத்தகைய ஏற்றுமதியாளர் அல்லது இறக்குமதியாளர் இவ்வொழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் பத்தாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் மற்றும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் சபையானது, அத்தகைய தவறுக்கு விதிக்கப்பட்ட தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, அத்தகைய தவறு எந்த உற்பத்திப்பொருள் தொடர்பாகப் புரியப்பட்டதோ அந்த உற்பத்திப்பொருளைப் பறிமுதல் செய்து, விடயத்துக்கேற்ப, அப்புறப்படுத்துவதற்கு அல்லது அழித்துவிடுவதற்குத் தோதானவொரு கட்டளையை ஆக்கும்படி நீதிமன்றத்துக்கு வேண்டுகோள்விடுப்பதற்கு உரித்துடையதாதலும் வேண்டும். நீதிமன்றமானது அது தகுதியானதெனக் கருதுகின்றவாறாக, அத்தகைய உற்பத்திப் பொருளை அப்புறப்படுத்துவதில் அல்லது அழித்துவிடுவதில் உறப்பட்ட செலவுத்தொகை குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்படுதல் வேண்டுமென்வும் கட்டளையை ஆக்கலாம்.

**சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப் பொருட்களின் சான்றுப்படுத்துகை**

17. சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருட்களின் தயாரிப்பாளர், பதனிடுபவர் அல்லது உற்பத்தியாளர் ஒவ்வொருவரும், சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப் பொருளாக அத்தகைய உற்பத்திப்பொருள் ஏற்றுமதி செய்யப்படுவதனை அல்லது உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்யப்படுவதனை இயலச் செய்வதற்கு, பதிவு செய்யப்பட்ட சான்றுப்படுத்துகைக் குழுவிடமிருந்து அல்லது பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூடத்திலிருந்து ஒத்திசைவுச் சான்றிதழொன்றைப் பெறுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

18. பதினேழாம் ஒழுங்குவிதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஒத்திசைவுச் சான்றிதழொன்று, பதிவு செய்யப்பட்ட சான்றுப்படுத்துகை அல்லது சோதனைக் குழுவொன்றினால் அல்லது பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூடமொன்றினால் அதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடவடிக்கைமுறைக்கு இணங்கியொழுக, சம்பந்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட சான்றுப்படுத்துகைக் குழுவுக்கு அல்லது ஆய்வுகூடத்துக்கு அதற்கெனச் செய்யப்பட்ட வேண்டுகோளின் மீது பெறப்படலாம்.

19. பதிவு செய்யப்பட்ட சான்றுப்படுத்துகைக் குழுவொன்று, சம்பந்தப்பட்ட சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயைபான இலங்கைச் சேதனப்பொருள் நியமங்களுக்கு இணங்கியொழுகுகின்றதாவென்பதைத் தீர்மானிப்பதற்கென, சபையினால் அந்நோக்கத்திற்காக வழங்கப்படுகின்றவாறான அத்தகைய வழிகாட்டு நெறிகளுக்கிணங்கவுள்ள வெளிக்களச் சோதனைகளையும் பரிசோதனைகளையும் நிறைவேற்றுதல் வேண்டும்.

20. அவசியமான சோதனைகளையும், பரிசோதனைகளையும் மற்றும் வெளிக்களச் சோதனைகளையும் நிறைவேற்றுவதன் மேல், விடயத்துக்கேற்ப பதிவு செய்யப்பட்ட சான்றுப்படுத்துகைக் குழு அல்லது ஆய்வுகூடம் சம்பந்தப்பட்ட சேதனப்பொருள் உற்பத்திப்பொருள் இலங்கைச் சேதனப்பொருள் நியமங்களுக்கு இணங்கியொழுகின்றதெனத் திருப்திப்பட்டால், அத்தகைய சேதனப்பொருள் உற்பத்திப்பொருள் தொடர்பில் ஒத்திசைவுச் சான்றிதமொன்றை அது வழங்குதல் வேண்டும். எந்தச் சேதனப்பொருள் உற்பத்திப்பொருள் தொடர்பில் ஒத்திசைவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்டுள்ளதோ அந்தச் சேதனப்பொருள் உற்பத்திப்பொருள், அத்தகைய உற்பத்திப் பொருளின் மீது "சேதனப்பொருள்" என்ற இலச்சினையை அல்லது சுட்டுத்துண்டைப் பயன்படுத்துவதற்கு அல்லது தேசிய சேதனப்பொருள் குறியைப் பயன்படுத்துவதற்கு உரித்துடையதாகும்.

21. சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருட்களின் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளரினால் ஏற்றுமதி செய்யப்படும் ஏதேனும் சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருளின் மீது தேசிய சேதனப்பொருள் குறி, அத்தகைய சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருள் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட சான்றுப்படுத்துகைக் குழுவினால் அல்லது பதிவு செய்யப்பட்ட ஆய்வுகூடத்தினால் ஒத்திசைவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்டிருந்தாலொழிய, பயன்படுத்தப்படாதிருப்பதனை உறுதிப்படுத்துவது அத்தகைய ஏற்றுமதியாளர் ஒவ்வொருவரினதும் கடமையாதல் வேண்டும்.

22. எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர், ஏதேனும் சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருள் தொடர்பில் வழங்கப்பட்ட ஒத்திசைவுச் சான்றிதழொன்றை முதலிற் பெறாமல் தேசிய சேதனப்பொருள் குறியை பயன்படுத்தி அத்தகைய உற்பத்திப் பொருளை ஏற்றுமதி செய்கின்றவிடத்து அல்லது ஏற்றுமதி செய்வதற்கு எத்தனிக்கின்றவிடத்து, அத்தகைய ஏற்றுமதியாளர் இவ்வொழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் 12 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட பதிவு, அத்தகைய குற்றப்பணத்தை விதிக்கின்ற நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்படுதலும் வேண்டும்.

23. எவரேனும் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர், எந்தச் சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருள் தொடர்பில் உத்திசைவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்டிருக்கவில்லையோ அந்தச் சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருளை சேதனப்பொருள் கமத்தொழில்சார் உற்பத்திப்பொருள் என்று விபரணம் செய்து ஏற்றுமதி செய்யுமிடத்து அல்லது ஏற்றுமதி செய்வதற்கு எத்தனிக்குமிடத்து, அத்தகைய ஏற்றுமதியாளர் இவ்வொழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபத்தையாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும் ; அத்துடன் மேலதிகமாக 12 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட பதிவு, அத்தகைய குற்றப்பணத்தை விதிக்கின்ற நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்படுதலும் வேண்டும்.

24. ஒழுங்குவிதி 6 அல்லது ஒழுங்குவிதி 15 என்பவற்றின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதேனும் சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப் பொருளை விற்பனை செய்பவராக அல்லது விற்பனைக்கு முனைபவராகக் காணப்படுகின்றவரான எவரேனும் இறக்குமதியாளர், தயாரிப்பாளர், பதனிடுபவர், உற்பத்தியாளர் அல்லது தொழிற்படுத்துநர் இவ்வொழுங்குவிதிகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் இருபத்தையாயிரம் ரூபாவுக்கு குறையாததும் மற்றும் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும். சபையானது, அத்தகைய தவறுக்காக விதிக்கப்பட்ட தண்டத்துடன் சேர்த்து மேலதிகமாக, அத்தவறு எந்தச் சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருள் தொடர்பாகப் புரியப்பட்டுள்ளதோ அந்தச் சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருளைப் பறிமுதல் செய்து, விடயத்துக்கேற்ப, அப்புறப்படுத்துவற்கு அல்லது அழித்துவிடுவதற்குத் தோதானவொரு கட்டளையை ஆக்கும்படி நீதிமன்றத்தில் வேண்டுகோள்விடுப்பதற்கு உரித்துடையதாதலும் வேண்டும். நீதிமன்றமானது, அது தகுதியானதெனக் கருதுகின்றவாறாக, அத்தகைய உற்பத்திப்பொருளை அப்புறப்படுத்துவதில் அல்லது அழித்துவிடுவதில் உறப்பட்ட செலவுத்தொகை குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆளினால் செலுத்தப்படுதல் வேண்டுமெனவும் கட்டளையாக்கலாம்.

25. இவ்வொழுங்குவிதிகளின் கீழான ஏதேனும் தவறுக்கான குற்றவழக்குத்தொடுப்பில், சம்பந்தப்பட்ட சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப் பொருளுக்கு 8 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சான்றுப்படுத்துகைக் குழுவினால் அல்லது ஓர் ஆய்வுகூடத்தினால் உத்திசைவுச் சான்றிதழொன்று வழங்கப்பட்டிருக்கவில்லையென்ற பொருள்பட சபையினால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்பட்ட சான்றிதழொன்று சான்றில் ஏல்தகவுடையதாதல் வேண்டுமென்பதுடன், அதன்கண் கூறப்பட்ட நிகழ்வுகளின் முதற்தோற்ற எண்பிப்பாதலும் வேண்டும்.

26. சபையானது, இவ்வொழுங்குவிதிகளின் கீழான அதன் பணிகளை நிறைவேற்றுவதில் உதவுவதற்கென நிபுணர்கள் குழாங்களை அல்லது மதியுரைக் குழுக்களை நிமிக்கலாம்.

27. சபையானது, இவ்வொழுங்குவிதிகளின் கீழான அதன் பணிகளை நிறைவேற்றுவதில் அளிக்கப்பட்ட எவையேனும் சேவைகள் தொடர்பில் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களை அறவிடுவதற்கு உரித்துடையதாதல் வேண்டும்.

28. (1) பின்வருவன தொடர்பாக இன்னலுறும் எவரேனுமாள் அல்லது ஆட்கள் குழு சபைக்கு முறைப்பாடொன்றைச் செய்யலாம்:-

(அ) ஏதேனும் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருளின் சேதனப்பொருள் நிலைமையைப் பாதிக்கின்ற, எவரேனும் ஏற்றுமதியாளரினால், இறக்குமதியாளரினால், தயாரிப்பாளரினால், உற்பத்தியாளரினால் அல்லது ஒரு தொழிற்படுத்துநரினால் விளைவிக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கீனம் அல்லது மீறுகை ;

(ஆ) பொய்யான ஒத்திசைவுச் சான்றிதழொன்றைப் பயன்படுத்துதலுட்பட, குறிப்பிட்டவொரு சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலங்கைச் சேதனப்பொருள் நியமங்களுக்கு இணங்கியொழுகின்றதெனச் செய்யப்பட்ட ஏதேனும் பொய்யான பிரதிநிதித்துவம் ;

(இ) ஏதேனும் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருளின் மீது ஒரு பொய்யான தேசிய சேதனப்பொருள் குறியின் பாவனை அல்லது ;

(ஈ) ஒரு பதிவு செய்யப்பட்ட சான்றுப்படுத்துகைக் குழுவினால் அல்லது பதிவு செய்யப்பட்ட ஓர் ஆய்வுடத்தினால் புரியப்பட்ட ஏதேனும் துர்நடத்தை அல்லது அசட்டை.

(2) சபையானது, அதற்குச் செய்யப்பட்ட முறைப்பாடொன்று பற்றிய விசாரணை முடிவுற்றதன் மேலும் மற்றும் செய்யப்பட்ட சார்த்துதலின் தன்மையைக் கவனத்திற்கொண்டும், முறைப்பாடு செய்யப்பட்ட சார்த்தப்பட்ட செயலைப் புரிந்துள்ளாரெனக் காணப்படும் ஆள் தொடர்பில் பின்வரும் வழிமுறைகளுள் ஏதேனுமொன்றை அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றை எடுத்தல் வேண்டும் :-

(அ) எச்சரிக்கைக் கடிதமொன்றைப் பதிவஞ்சலில் அனுப்புதல் வேண்டும் ;

(ஆ) அத்தகயை ஆளுக்கு வழங்கப்பட்டுள்ள, விடயத்துக்கேற்ப, அனுமதிப்பத்திரத்தை அல்லது பதிவுச்சான்றிதழை இடைநிறுத்துதல் அல்லது இல்லாதாக்குதல் வேண்டும் ;

(இ) சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான காலப்பகுதிக்குச் சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதிலிருந்து அல்லது விற்பனை செய்வதிலிருந்து அத்தகைய ஆளைத் தடை செய்தல் வேண்டும் ;

(ஈ) சம்பந்தப்பட்ட ஆளின் சார்த்தப்பட்ட செயலின் விளைவாக முறைப்பாட்டாளர்களுக்கு விளைவிக்கப்பட்ட எவையேனும் சேதவீடுகளை அல்லது செலவுகளை மேவுவதற்குப் போதியதெனச் சபை கருதுகின்றவாறான தண்டமொன்றை விதித்தல் வேண்டும் ; அல்லது

(உ) சபையினால் தீர்மானிக்கப்படுகின்றவாறான காலப்பகுதிக்கு அத்தகைய ஆளின் பெயரைக் கறுப்புப்பட்டியலில் இடுதல் வேண்டும்.

(3) சபைக்குச் செய்யப்பட்ட முறைப்பாடு பற்றி விசாரணையை நடாத்துவதில், சபையானது, 26 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அந்நோக்கத்துக்காக நியமிக்கப்படக்கூடியவாறான ஒரு குழாத்தின் அல்லது குழுவின் உதவியை நாடலாம்.

29. இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய–

“சபை” என்பது, 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை என்று பொருளாகும் ;

“தொழிற்படுத்துநர்” என்பது, இலங்கைச் சேதனப்பொருள் நியமங்களுக்கிணங்க முதன்முதலாக வளர்க்கப்பட்டவை, முதன்முதலாக உற்பத்தி செய்யப்பட்டவை அல்லது சேதனப்பொருளெனச் சான்றுப்படுத்தப்பட்டவை எனக் குறிப்பீடு செய்யப்படும் உற்பத்திப்பொருட்களை, அவற்றை அடுத்துப்பின்னர் சந்தைப்படுத்தும் நோக்குடன் விளைவாக்குகின்ற, கையாளுகின்ற அல்லது பதனிடுகின்ற ஆள் அல்லது ஆட்கள், கூட்டிணைப்பு உருவகம் அல்லது ஒழுங்கமைப்பு என்று பொருளாகும் ;

“சேதனப்பொருள்” என்பது, சுட்டுத்துண்டிடுதல் தொடர்பாக, சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருளாகச் சுட்டுத்துண்டிடப்பட்ட உற்பத்திப்பொருளானது சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டவாறான இலங்கைச் சேதனப்பொருள் நியமங்களுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டது என்று பொருளாகும் ;

“சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப்பொருள்” என்பது, தாவரங்களிலிருந்து அல்லது தாவர உற்பத்திப்பொருட்களிலிருந்து முதன்முதலாகத் தோன்றுகின்ற ஏதேனும் உற்பத்திப்பொருள் என்று பொருளாகுமென்பதுடன், கால்நடையையும் அல்லது கால்நடை உற்பத்திப் பொருட்களையும், மீனையும் அல்லது மீன் உற்பத்திப் பொருட்களையும் மற்றும் நீர்வாழ் உயிரின உற்பத்திப் பொருட்களையும் உள்ளடக்கும் ;

“பதிவு செய்யப்பட்ட சான்றுதிப்படுத்துகைக் குழு” என்பது, 8 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் சபையுடன் பதிவு செய்யப்பட்டதும் மற்றும் ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபையினால் தராதர அங்கீகாரம்பெற்றதுமான, சேதனப்பொருள் கமத்தொழிற்சார் உற்பத்திப் பொருளின் சான்றுப்படுத்துகை அல்லது சோதனைக் குழு அல்லது ஆய்வுகூடம் ஒன்று என்று பொருளாகும் ;

“ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச்சபை” என்பது, 2005 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத்தராதர அங்கீகாரச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஒத்திசைவு மதிப்பீட்டிற்கான இலங்கைத் தராதர அங்கீகாரச் சபை என்று பொருளாகும் ; அத்துடன்

“இலங்கைக் கட்டளை நிறுவனம்” என்பது, 1984 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைக் கட்டளைகள் நிறுவனச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைக் கட்டளைகள் நிறுவனம் என்று பொருளாகும்.

## அட்டவணை

(ஒழுங்குவிதி 13)

### தேசிய சேதனப்பொருள் குறி

**Green : #008601**
**Ocean Blue : #1c9cc9**
**Yellowish Brown : #c29134**

*07 - 812*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.